கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**அசல் வழக்கு எண்.178/2015**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 20.08.2024 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 20.08.2024 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | சவுரிராஜன் | வயது.. | 65 |
| தந்தை பெயர்.. | முருகேசன் | கிராமம்.. | ஓடாக்கநல்லூர் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி..**

4. இந்த வழக்கு சொத்தின் புல எண். தெரியுமா என்றால் தெரியும் புல எண்.59/23A. புல எண்.59 ன் மொத்த விஸ்திரணம் தெரியுமா என்றால் தெரியாது. புல எண்.59 ன் மொத்த விஸ்திரணம் 1 ஹெக்டேர் 43 ஏர்ஸ் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புல எண்.59/23 ல் மொத்த உட்பிரிவு என்று தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு புல எண்.59/23A வில் நான்கு செண்ட் நிலம் பாத்தியம் என்றால் சரிதான். புல எண்.59/23A எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 17.03.1990 ல் எனக்கு பட்டா வழங்கப்பட்டது. 17.03.1990 க்கு முன்பு அந்த சொத்து யார் பெயரில் இருந்தது என்றால் என் தகப்பனார் முருகேசன் பெயரில் இருந்தது. எனது தகப்பனார் முருகேசன் பெயரில் எவ்வளவு செண்ட் இருந்தது என்றால் 4 செண்ட்.

5. 17.03.1990 க்கு முன்பாக 16 செண்ட் நிலத்திற்கு பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் தனசேகர், கிட்டு. இளங்கோவன், மனோகரன். அது கூட்டு பட்டாவா என்றால் தெரியாது. 17.03.1990 க்கு முன்பு 16 செண்ட் நிலத்திற்கு பட்டா என் தகப்பனார் பெயரில் இல்லை என்றால் சரிதான். 17.03.1990 ல் பட்டா வழங்கியதற்கான உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.16 ஆவணம் தான் அந்த உத்தரவு என்றால் அது தோராயப்பட்டா. 17.03.1990 ல் எனக்கு வழங்கப்பட்ட உத்தரவின் நகல் நீதிமன்றத்தில் இல்லை என்றால் சரியல்ல என்னுடைய முந்தைய வழக்கறிஞரிடம் அனைத்து ஆவணங்களையும் கொடுத்துவிட்டேன்.

6. மனைவரி தோராயப்பட்டா வான பி.வா.சா.ஆ.16 ஆவணம் தான் எனக்கு வழங்கப்பட்ட பட்டா என்றால் சரிதான். மனைவரி தோராயப்பட்டா 27.09.1992 வழங்கப்பட்டது என்றால் சரிதான். தனசேகர், கிட்டு. இளங்கோவன், மனோகரன் ஆகியோர்களுக்கு எனக்கு பட்டா வழங்குவதற்கு முன்பு அழைப்பாணை கொடுத்து விசாரணை செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது. அதற்கான ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. புல எண்.59/23A க்கு கீழ்புரம் 24. ஏற்கனவே ராஜமாணிக்கம் பெயரில் இருந்து தற்போது இளங்குமரன் கிரயம் வாங்கியுள்ளார். இளங்கோவன் குமாரர் தான் இளங்குமரன். இளங்குமரன் இந்த வழக்கில் தரப்பினரா என்றால் இல்லை.

7. புல எண்.59/23A க்கு மேல்புரம் மாரியம்மன் கோவில் பட்டா நிலம். புல எண்.59/23A க்கு வடபுரம் புல எண்.59/8 ல் செல்வகணேசன் வீடு உள்ளது என்றால் ரோட்டிற்கு வடக்கால் உள்ளது. புல எண்.59/8 க்கு கீழ்புரம் புல எண்.59/9 தனபால், முருகேசன் நிலம் உள்ளது என்றால் ரோட்டிற்கு வடக்கால் உள்ளது, ரோட்டை மறைத்து வீடு கட்டியுள்ளார். ரோடின் சர்வே எண். தெரியுமா என்றால் தெரியாது. புல வரைபடத்தில் ரோடு என்று பதிவாகியுள்ளதா என்றால் பழைய FMB ல் இல்லை. பி.வா.சா.ஆ.16 ஆவணத்தில் புல எண்.59/23A வடபுரம் புல எண்.59/8c என்றும் கீழ்புரம் புல எண்.59/9C என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.16 ஆவணத்தில் புல எண்.59/23A 110 சதுர மீட்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மீட்டர் கணக்கு தெரியாது.

8. புல எண்.59/23 மற்றும் புல எண்.59/24 ன் தென்புரம் கீழ்மேல் ரோடு உள்ளது என்றால் சரிதான். புல எண்.59/17,18,19,20,21,22 ஆக உட்பிரிவானது தெரியுமா என்றால் தெரியும். அந்த உட்பிரிவுகள் யாரிடம் உள்ளது என்றால் தனசேகரனிடம் உட்பிரிவு 16,17,18 உள்ளது மற்றவை யாரிடம் உள்ளது என்றால் தெரியாது. புல எண்.59/9 ன் யாரிடம் உள்ளது என்றால் என்னுடைய நிலம். அதற்கும் கீழ்புரம் செல்வத்தின் நிலம். புல எண்.59/11,12,13,14 யாரிடம் உள்ளது என்றால் தெரியாது. புல எண்.59/24 க்கு கீழ்புரம் யாருடைய நிலம் என்றால் முருகேசன், மதிவாணன். இந்த முருகேசன் தான் என் தகப்பனாரா என்றால் இல்லை அது வேறு முருகேசன். மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் இரண்டாம் மேல்முறையீடு ஏற்பட்ட தீரப்புரையை படித்து பார்த்தேனா என்றால் நான்கு செண்ட் நிலம் எனக்கு உரிமையானது என்று தீர்ப்பு பகரப்பட்டது.

9. இரண்டாம் மேல்முறையீட்டில் வாதியனவர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இருந்ததால் விளம்புகை பரிகாரம் கேட்பதற்கு உரிமை அளிக்கப்பட்டிருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.1 பாக அட்டவணை ஏற்ப்பட்டது 11.05.1949. நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1954. பாக அட்டவணையில் எத்தனை பேர் தரப்பினராக இருந்தார் என்றால் ஐந்து. பாக அட்டவணையில் பிரிக்கப்பட்டதை அனுசரித்து அவரவர் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதா என்றால் தெரியாது. எனது தகப்பனாருக்கு பாக அட்டவணையில் என்ன சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் புல எண்.59/9 ல் வீடு, புல எண்.59/23 ல் நான்கு செண்ட். என் தகப்பனார் பெயர் முருசேகன் படையாச்சி என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு B இன சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

10. B அட்டவணை சொத்தில் புல எண்.38/5, 38/7 மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தில் முழு விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது அந்த நான்கு செண்ட் -ல் என்ன உள்ளது என்றால் காலி இடமாக உள்ளது. பாக அட்டவணை காலத்தில் அந்த நான்கு செண்ட் இடத்தில் வீடு இருந்ததா என்றால் இல்லை. பாக அட்டவணை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. கங்காதரபடையாச்சி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. எனது தாத்தாவின் பெயர் கோவிந்த படையாச்சி, கோவிந்த படையாச்சியின் தகப்பனார் பெயர் தம்பி படையாச்சி , கோவிந்த படையாச்சியின் உடன் பிறந்தவர்கள் கங்காதர படையாச்சி, வேலாயுதம், ராசு என்கிற ராமசாமி.

11. தம்பி படையாச்சிக்கு மகள் உள்ளாரா என்றால் ரத்தினம் என்கிற தில்லையம்மாள் என்ற ஒரு மகள். கோவிந்த படையாச்சிக்கு ஆறு மகன்கள் என்றால் சரிதான். அதில் ஒருவர் தான் எனது தகப்பனார், என்னுடைய பெரியப்பா தங்கராசு, தங்கராசுவின் மகன்கள் தான் 1,2 வாதிகள் மற்றும் வேறு இரண்டு மகன்கள் என்றால் சரிதான். என்னுடைய பெரியப்பாவின் மகன்கள் தான் என் மீது வழக்கு தொடர்ந்துள்ளார்கள் என்றால் சரிதான். நான்கு செண்ட் நிலத்தை பொறுத்து என் மனைவி பெயரில் பி.வா.சா.ஆ.17 ஆன செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிவைத்துள்ளேன் என்றால் சரிதான். என் உடன்பிறந்தவர் களில் கஸ்தூரி என்பவர் இருக்கிறாரா என்றால் இருக்கிறார்., முருசேகனுக்கு 1 மகன், 1 மகள். முருகேசன் இறப்பதற்கு முன்பு அவர் சொத்துக்கள் பொறுத்து எழுத்து மூல ஆவணம்

ஏற்படுத்தினாரா என்றால் இல்லை. எனது தாயார் அம்சவள்ளி முருகேசன் இறக்கும்போது உயிருடன் இருந்தாரா என்றால் இருந்தார்.

12. முருகேசன் அவரின் மனைவி. 1 மகன், 1 மகளை வாரிசாக விட்டு விட்டு இறந்து விட்டார். பி.வா.சா.ஆ.17 செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனக்கு எவ்வாறு நான்கு செண்ட் பாத்தியம் என்பதை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன், பாக அட்டவணை மற்றும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் பாத்தியம் என குறிப்பிட்டுள்ளேன். 06.01.1968 OS.855/1967 படி என் தகப்பனாருக்கும் என் பெரியப்பாவிற்கும் மனை சம்மந்தமாக தகராறு ஏற்பட்டு சமாதானமாக முடித்து வைத்தப்பட்டது. அந்த வழக்கு நடக்கும் போது நான் சிறுவயது பிள்ளை என்றால் சரிதான்.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Suganiya Sri,
Additional District Munsif
Chidambaram.